மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் பணிகள் குறித்து ஆய்வு செய்தபோது, அப்பிரச்சினை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கடந்த கூட்டத்தொடரிலேயே சட்டமன்றத்தில் இதுகுறித்து எடுத்துச்சொன்னார். தேர்தலுக்கு முன்பாகவே, அப்பணிகள் நடைபெறாமல் இருந்தன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவரோடு நானும், துறையின் செயலாளர் மற்றும் துறையின் இயக்குநருடன் தொடர்புகொண்டு பேசினேன். அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் குறித்த பிரச்சினை நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் இப்போது ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது. விரைவில் அந்தப் பணி நிச்சயமாக துவங்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

கால்நடை மருத்துவக் கல்லூரி

***75580—திரு. பி. அய்யப்பன்:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி பகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2023 மார்ச் 27]

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி பகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், தலைவாசலில் ஆசிய கண்டத்திலேயே பிரசித்திபெற்ற வகையில் அமைய வேண்டுமென்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட கால்நடைப் பூங்கா, கால்நடை ஆராய்ச்சி நிலையம், கால்நடை கல்லூரி போன்ற திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, சில பகுதிகளை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது திறந்து வைத்தார்கள். எஞ்சியுள்ள பகுதிகளில் பணி முடிக்கப்பட்டு, எப்பொழுது பொதுமக்களுடைய பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் உள்ள தலைவாசலில் கால்நடை ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காக ஏற்கெனவே பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. வெகு விரைவில், ஏறக்குறைய மூன்று மற்றும் நான்கு மாதக் காலத்திற்குள் எல்லாப் பணிகளும் முடிவடைந்து அந்த ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், விவசாயத்தை நம்பியிருக்கின்ற மாவட்டமாகும். வேறு*

தொழிற்சாலைகள் இல்லாத மாவட்டம். அந்த மாவட்டத்தில் அதிகளவில் கால்நடைகள் இருக்கின்றன. கிராமங்கள்தோறும் பெண்கள் கால்நடை வளர்ப்பில் வரும் வருமானத்தில்தான் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்திலேயே இன்றைக்கு இரண்டாவது நிலையில் பால் supply செய்யக்கூடிய மாவட்டமாக திருவண்ணாமலை மாவட்டம் இருக்கிறது. ஆகவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கால்நடைகளைப் பராமரிப்பதற்காக கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்று திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வழங்கப்படுமா? டெல்லியில் தனியார் கால்நடை மருத்துவக் கல்லூரி இருக்கிறது. அதுபோன்று தனியார் கால்நடை மருத்துவக் கல்லூரியாவது தரப்படுமா? இப்போது நீட் தேர்வுகளால் பல பேருக்கு டாக்டர் கனவு நனவாகாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில், கால்நடை மருத்துவக் கல்லூரியைத் துவங்கினால், அவர்கள் அக்கல்லூரியில் சேர்ந்து படிக்க வாய்ப்பாக இருக்கும். ஆகவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரியை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சென்னை, நாமக்கல், திருநெல்வேலி, தஞ்சாவூர், தேனி, உடுமலைப்பேட்டை மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ் 7 கால்நடை மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த 7 கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலும் வருடத்திற்கு 450 மாணவ, மாணவியர்கள் கால்நடை மருத்துவ பட்டப் படிப்புகளை பயின்று வருகின்றனர். இப்போது திருவண்ணாமலை மாவட்டத்திற்கு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்றார்கள்.

அதேபோல், தனியார் கால்நடை மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா என்று கேட்டால், அது அரசினுடைய கொள்கை முடிவாகும். மாண்புமிகு உறுப்பினர்

2023 மார்ச் 27]

அவர்கள் இன்றைக்கு திருவண்ணாமலை மாவட்டத்திற்கு கால்நடை மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்றவாறு அதை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாவட்ட அமைச்சரிடம், மிக கவனமாக கால்நடை மருத்துவக் கல்லூரியை கொடுத்துவிடுவீர்கள் என்றுதான் கேட்கிறார்.*

வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

44—

கதர் கிராமத் தொழில் அலகு

***1902—திருமதி ஆ. தமிழரசி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதியில் கதர் கிராமத் தொழில் அலகு அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களில் கதர் அங்காடி விற்பனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. காரைக்குடி அருகேயுள்ள கண்டனூர் கதர் வளாகத்தில் கதர் தொழில் மையங்கள் அமைத்திட, வாரியத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிவகங்கை மாவட்டத்தில், மேற்கண்ட இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மானாமதுரையில் கதர் வாரியத்தில் பதிவு செய்யப்பெற்ற மண்பாண்டத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஆகவே, புதிதாக வேறு ஒரு கதர் கிராமத் தொழில் மையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.